ශ්‍රී ලංකා පරිපාලන සේවා සංගමය
ஸ்ரீ லங்கா நிருவாக சேவைச் சங்கம்
SRI LANKA ADMINISTRATIVE SERVICE ASSOCIATION

# ஊடக அறிக்கை

இன்றைய தினம் ரம்புக்கன பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் போராட்ட நிலைமையில் ஒருவர் மரணித்ததுடன் 24 பேர் காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை நிர்வாக சேவை சங்கம் தன்னுடைய விஷேட கவனத்தைச் செலுத்துகிறது.

எங்கள் சங்கத்தின் மூலம் தற்போதைய அரசிற்கு பல முறை மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் மற்றும் உரிமை சார்ந்த போராட்டங்களை புத்தியுடனும் பொறுமையுடனும் கருணையுடனும் அணுகுமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் இடித்துரைக்கப் பட்டிருந்தாலும் அவற்றினை அரசாங்கம் இன்னமும் அந்த ஆலோசனைகளை கணக்கிலெடுக்காமல் எந்தவிதமான நியாயமற்ற/ முறையற்ற விதத்தில் நடந்து கொள்வது தெளிவாகிறது.

மிகுந்த பொருளாதார சிக்கல்களையும் அன்றாட வாழ்க்கைக்கான நிதியைத் திரட்டி கொள்வதில் காணப்படும் பிரச்சினைகளையும் தாங்கிக்கொண்டு பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் வேதனையுடன் வாழும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக அவர்களது வாழும் உரிமையை இல்லாமல் ஆக்குவது எக்காலத்திலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதனையும் இந்தச் செயல் தொடர்பில் இலங்கை நிர்வாக சேவை சங்கம் ஆனது மிகவும் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறது.

23 සී, සමුළු නිවාස, කැප්පෙටිපොල මාවත, කොළඹ 05. 23 சீ, சமிட் தொடர்மாடி,கெப்பிட்டிப்பொல மாவத்தை, கொழும்பு-05.
23C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05.
දුරකතනය/ தொலைபேசி/Telephone : 011 5766855 ෆැක්ස්/தொலைநகல்/ Fax : 011 2058027
විද්‍යුත් තැපැල/மின்னஞ்சல்/ Email : sasa.execo@gmail.com වෙබ් අඩවිය/இணையத்தளம்/ Web: www.sasa.lk

இந்த சம்பவங்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளும் படியும் இதில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தங்களது அதிகார வரம்பை மீறி செயல்பட்டிருக்கிறார் என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளும் படியும் சம்பந்தப்பட்ட தரப்பினரை கேட்டுக் கொள்கிறது.

இலங்கையின் மனித உரிமைகள்/நீதி தொடர்பாக சர்வதேச மட்டங்களில் கவனம் ஏற்பட்டிருக்கும் இந்த வேளையிலும் இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் பல்வேறு உதவிகளை கோரியுள்ள இந்த நிலையில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நமது தாய்நாட்டின் மீது உள்ள சர்வதேச பார்வை தொடர்பாகவும் இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கான உதவிகளை வழங்குவது தொடர்பிலும் பாரிய சிக்கல்களை தோற்றுவித்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் காரணமாக அமையலாம்

ஆகவே இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நாம் வராமல் தடுப்பது அரசின் தலையாய கடமை என இவ்வேளையில் இடித்துரைக்க கடமைப்பட்டுள்ளோம்

**2022.04.19**